# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **இந்திய வெளியுறவுக் கொள்கை**


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்திய வெளியுறவுக் கொள்கை

**அறிமுகம்**

வெளியுறவுக் கொள்கை என்பது ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களின் மூலம் தேசிய நலனைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளைப் பேணவும் வடிவமைக்கப்பட்ட கொள்கை ஆகும். இது நாட்டு மக்களின் சிறந்த நலன்கள், நாட்டின் பரப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க முயல்கிறது. வெளியுறவுக் கொள்கை என்பது நாட்டின் பாரம்பரிய மதிப்புகள், ஒட்டு மொத்த தேசியக் கொள்கை, எதிர்பார்ப்பு மற்றும் சுய கருத்து ஆகியவற்றின் நேரடி பிரதிபலிப்பாகும். நாடுகள் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. சர்வதேச உறவுகளில் ஒன்றையொன்று சார்ந்திருப்பது தவிர்க்க இயலாததாகும்.

| |
|---|
| வெளியுறவு அமைச்சகம் எனப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சரவை இந்திய அரசின் ஒரு அங்கமாக இருந்து நாட்டின் வெளியுறவுகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது. 1986ஆம் ஆண்டு புது டெல்லியில் நிறுவப்பட்ட இந்திய வெளிநாட்டுச் சேவை பயிற்சி நிறுவனம் இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரிகளுக்கு (IFS) பயிற்சி அளிக்கிறது. |

ஒரு குறிக்கோள் மற்றும் இலக்கு சார்ந்த வெளியுறவுக் கொள்கையானது நாடுகளிடையே மேம்பட்டஉறவுகளைஅடையும்திறனையும்விரைவானவளர்ச்சிக்கானபலத்தையும்கொண்டிருக்கும். வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்: உடன்படிக்கைகள், நிர்வாக ஒப்பந்தங்கள், தூதுவர்களை நியமித்தல், வெளிநாட்டு உதவி, சர்வதேச வணிகம் மற்றும் ஆயுதப்படைகள் ஆகியவைகள் ஆகும்.

**இந்திய அரசியலமைப்புச்சட்டம் 1950 சட்டப்பிரிவு 51**

அரசு நெறிமுறையுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள்.

அரசு முயற்சி செய்ய வேண்டியவைகள்:

- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்
- நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளைப் பேணுதல்
- சர்வதேசச் சட்டம் மற்றும் சர்வதேச அமைப்புகளை மதித்தல்
- சர்வதேசப் பிரச்சனைகளை நடுவர் மன்றம் மூலம் தீர்க்க ஊக்குவித்தல்

## நமது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள்

- தேசியப் பாதுகாப்பு
- தேசிய வளமை

- நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- உலக அமைதி அடைதல் மற்றும் ஒவ்வொரு நாட்டுடனும் அமைதியுடன் சேர்ந்திருத்தல்
- பொருளாதார வளர்ச்சி

### பஞ்சசீலம்

(சமஸ்கிருதச் சொற்களான பாஞ்ச் = ஐந்து, சீலம் = நற்பண்புகள் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது).

இந்தியா (பிரதமர் – ஜவகர்லால் நேரு) மற்றும் சீனா (பிரதமர் – சூ-யென்-லாய்) ஆகிய நாடுகளுக்கிடையே அமைதியுடன் இணங்கியிருத்தலுக்கான 5 கொள்கைகள் (பஞ்சசீலம்), 1954 ஏப்ரல் மாதம் 28ஆம் நாள் கையெழுத்தானது. இரு அரசாங்கங்களும் பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன.

**பஞ்சசீலம்**

- ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்
- பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை
- பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
- பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்
- அமைதியாக சேர்ந்திருத்தல்

இந்தக் கொள்கைகள் இந்தோனேசியாவில் 1955ஆம் ஆண்டு நடைபெற்ற ஆப்பிரிக்க – ஆசிய மாநாட்டில் கையெழுத்தான பாண்டுங் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

### வெளியுறவுக் கொள்கையினை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள்

- நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு
- நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையிலானவை
- இயற்கை வளங்கள்
- பொருளாதார வளர்ச்சியின் அவசியம்
- அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு
- அமைதிக்கான அவசியம், ஆயுதக் குறைப்பு, அணு ஆயுதப் பெருக்கத்தடை
- ராணுவ வலிமை
- சர்வதேச சூழ்நிலை

**1950 மற்றும் 1960களில் வெளியுறவுக் கொள்கைகள்**

நாடு சுதந்திரம் அடைந்தது முதல் 1950 மற்றும் 1960களில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள், நாட்டின் முதல் பிரதமரான ஜவகர்லால் நேரு வழிகாட்டுதலின்படி முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டதாக அமைந்திருந்தன. நீண்டகாலமாகக் காலனியாதிக்கத்தில்

இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் பொருளாதார மேம்பாடு தொடர்பாகக் கடுமையான சூழ்நிலையை எதிர்கொண்டன. எனவே சோவியத் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியம் (USSR) அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ஆகியவற்றின் ஏதேனும் ஒரு முகாம்களில் சேர்வது அவசியமாயிற்று. நாட்டின் முதல் பிரதமரான நேரு, அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகள் ஆப்பிரக்கா, ஆசியாவில் புதிதாகத் தோன்றிய நாடுகளில் தங்களது செல்வாக்கைச் செலுத்துவதை எதிர்த்தார். எனவே பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா வல்லரசுகளுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்ற வழியைத் தேர்ந்தெடுத்ததோடு சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க முயன்றார். அச்சமயத்தில் இந்திய வெளியுறவுக் கொள்கையின் நோக்கம் உலக ஒத்துழைப்பு, உலக அமைதி, காலனிய ஏகாதிபத்திய முடிவு, இனச் சமத்துவம் மற்றும் அணி சேராமை ஆகியனவாகும்.

## அணிசேரா இயக்கம் (The Non Aligned Movement) 1961

'அணி சேரா இயக்கம்' என்ற சொல் 1953இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி.கிருஷ்ண மேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது. அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. இதன் நோக்கம் ராணுவக் கூட்டணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலாகும். பன்முகக் கூட்டரங்கில் இது மிகப்பெரிய அரசியல் குழுவாக விளங்குகிறது. அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளராகவும் 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது. வளர்ச்சி குறைந்த நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பிற்கான அடித்தளத்தை நிறுவுவதில் அணிசேரா நாடுகள் வெற்றி அடைந்துள்ளன. மற்றொரு குறிப்பிடத்தக்க உண்மை என்னவென்றால் இது ஒரு அரசியல் இயக்கத்திலிருந்து பொருளாதார இயக்கமாக மாற்றம் கொண்டுள்ளது.

**அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் :** இந்தியாவின் ஜவகர்லால் நேரு, யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோராவர்.

### புதிய சவால்கள் மற்றும் கொள்கை மாற்றங்கள்

இந்தியா அணிசேரா இயக்கத்தில் இருந்த போதும் சோவியத் யூனியனுடன் 1971ஆம் ஆண்டில் இந்திய – சோவியத் ஒப்பந்தத்தின் (20 ஆண்டு கால ஒப்பந்தமான அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு) மூலம் இணைந்தது. பின்னர் இந்தியா ராணுவ நவீனமயமாக்கலை மேற்கொண்டது. சீனா 1964ஆம் ஆண்டு லாப் நார் (Lop Nor) என்னுமிடத்தில் மேற்கொண்ட அணு சோதனைக்குப் பதிலடியாக இந்தியா தனது முதல் பூமிக்கடியிலான அணு சோதனைத் திட்டத்தினை 1974இல் நடத்தியது. (நிலத்தடி அணு வெடிப்புத் திட்டம் /Subterranean Nuclear Explosions Project)

மாறி வரும் உலகச் சூழ்நிலைகள் வெளியுறவுக் கொள்கை விவரங்களைத் தீர்மானிக்கின்றன. எனினும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை நன்கு வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் உள்ளது. இக்கோட்பாடுகள் வெறும் கொள்கை அளவில் இல்லாமல் நடைமுறை

சாத்தியம் கொண்டவையாகவும் உள்ளன. பேரழிவை ஏற்படுத்திய இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இந்தியா அரசியல் விடுதலை பெற்றது. மேலும் தீவிர வறுமை, படிப்பறிவின்மை, குழப்பமான சமூக–பொருளாதார நிலைகளிலிருந்து இந்தியா தன்னை மீட்டெடுக்க வேண்டியிருந்தது. இதனால் நமது புதிய நாடு ராணுவக் கூட்டு மற்றும் ஒப்பந்தத்தில் ஈடுபட இயலவில்லை. சுதந்திர இந்தியா தனது மக்களாட்சி முறையைப் பாதுகாக்க வேண்டிய அதே நேரத்தில் பின்தங்கிய நிலையிலிருந்த தேசத்தைக் காப்பாற்றும் வழிகளையும் உருவாக்க வேண்டியிருந்தது. இராணுவக் கூட்டினைத் தவிர்ப்பது என்பது அப்போது ஒரு விருப்பமாக மட்டுமின்றி ஒரு தேவையாகவும் இருந்தது. தற்போது அணிசேராமை என்பது நடுநிலைமையாக இருப்பது என்பது பொருள் அல்லது பிரச்சனைகளுக்கு முடிவுகளை நாடுகள் சுதந்திரமாகத் தீர்மானிப்பதாகும். அணிசேராமை என்பது இராணுவ வலிமை இல்லாது இருத்தல் என்று பொருள் அல்ல. மோதல்கள் மற்றும் பதட்டங்களைக் குறைப்பதை உறுதி செய்வது எனப் பொருள்படுவதாகும். பரந்த அளவில் இது, இந்தியா தனது சமூக – பொருளாதார மேம்பாட்டில் கவனம் செலுத்திட உதவியது. இக்கால கட்டத்தில் இந்தியா இரண்டு போர்களைப் பாகிஸ்தானுடன் எதிர் கொண்டது.

அழிவை ஏற்படுத்திய சீன – இந்தியப் போர் கூட்டுச்சேராமையை நடைமுறை சாத்தியமற்றதாக்காமல் இராணுவக் கட்டமைப்பின் பற்றாக்குறையை வெளிப்படுத்தியது. கூட்டு சேராமை விலக்கினாலும் கூட இந்தியா அதிகளவில் தனது ராணுவ அமைப்பைப் பலப்படுத்தவும் ஒரு அணுசக்தி நாடாகவும் ஆக முடிந்தது. வெளியுறவுக் கொள்கைகளை நிர்வகிப்பதில் ஏற்படும் குறைகளும் தவறுகளும் அவ்வப்போது சரி செய்யப்பட்டாலும் இந்தியாவின் அடிப்படைக் கொள்கையான அணிசேராமை இன்னும் நடைமுறையில் உள்ளது. அணிசேரா இயக்கம் என்பது நாடுகளிடையே அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கான பரஸ்பர உதவிக்கானதாகும்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் நிலைப்பாடுகள்.

- காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட ஆதரவளித்தல்
- தென்னாப்பிரிக்காவில் நிலவிய இனவெறியைக் கடுமையாக எதிர்த்தல்
- பாதுகாப்பு, ஆயத்த நிலைமையின் முக்கியத்துவத்தை எதிர்கொள்ளுதல்

**புதிய மாற்றங்கள்-1990 மற்றும் இருபதாம் நூற்றாண்டு**

1990களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் மேற்கத்திய நாடுகளின் ஆதரவோடு ஒரு புதிய உலகளாவிய பொருளாதார கொள்கை (தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலக மயமாக்கல்) எழுச்சி பெற்றது. புதிய பொருளாதார ஒழுங்கும் ஒரு துருவ உலகமும் (அமெரிக்க ஐக்கிய நாடுகள் மையமாக) இந்தியா உள்ளிட்ட நாடுகள் தங்களின் வெளியுறவு மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைக்க வலியுறுத்தின. இந்தியா உலகப் பொருளாதார மன்றத்துடன் (GATT) ஓர் ஒப்பந்தத்தில் சேர்ந்ததோடு இருதரப்பு, முத்தரப்பு, பலதரப்பு ஒப்பந்தங்களிலும் இணைந்துள்ளது. இந்தியாவின் அணு ஆயுத சோதனைகள் மேற்கத்திய நாடுகளில் இருந்து அச்சுறுத்தும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தின.

இந்திய வெளியுறவுக் கொள்கை பின்வரும் பல்வேறு வகைகளில் மாற்றம் கொண்டது.

- சீனாவுடனான நட்புறவு – கிழக்கு நோக்கு கொள்கை (1992)
- பொக்ரான் (ராஜஸ்தானில்) நடைபெற்ற இரண்டாவது அணு சோதனை (1998)
- இஸ்ரேலிடமிருந்து பாதுகாப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்தலுக்கான உறவு
- அரபு நாடுகள் மற்றும் ஈரானுடன் எரிசக்தி ஆற்றல் வள தூதரக உறவு
- அமெரிக்காவின் அணு ஏவுகணைப் பாதுகாப்பு திட்டத்தை ஏற்றுக் கொள்ளுதல்
- சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் ஈரானுக்கு எதிராக இந்தியாவின் வாக்களிப்பு

**21ஆம் நூற்றாண்டில் மீண்டெழும் இந்தியா**

சர்வதேச அமைப்பின் அமைப்பு முறை மாறி உள்ளது. இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான பணி இந்தியாவின் உள்நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகும். இதன் மூலம் இந்தியாவின் பன்முக மதிப்பீடுகளை ஊக்குவிப்பதுடன் இந்தியப் பொருளாதாரம் மற்றும் சமூக மாற்றங்களை மேம்படுத்த இயலும். வெளியுறவுக் கொள்கை நோக்கில் பொருளாதார வளமே இந்தியா வல்லரசு அடைவதற்கான திறவுகோலாகக் காணப்படுகிறது. தற்போது நமது வெளியுறவுக் கொள்கை உள்நாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான உள்முதலீட்டை அதிகரித்தல், வணிகம், தொழில்நுட்பம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான வழிமுறையாகச் செயல்படுகிறது. தெற்காசியில் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் நிலைத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் இது எளிதாக்கப்படும்.

உலகின் தீவிரமான பொருளாதார நடவடிக்கைகளுக்காக இந்தியா தனது கொள்கைகளைச் சரி செய்துள்ளது. இது நமது மூலதனங்களுக்கான உள் முதலீட்டை அதிகரித்தல், தொழில்நுட்ப யோகனை, வளர்ச்சிக்கான கருத்துகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் உலகின் முன்னணி பொருளாதாரங்களுள் ஒன்றாக மறுவெழுச்சி அடைதல் ஆகியவற்றிற்கேற்ப வடிவமைத்துள்ளது. இக்காலகட்டத்தில் ஏற்பட்ட நிலையான அதிக பொருளாதார வளர்ச்சியானது நாட்டு மக்களை மேம்படுத்துவதற்கு உதவியதோடல்லாமல் இந்தியா வெளி உலக தொடர்பில் அதிகளவில் ஈடுபடவும் வழிவகுத்தது.

இந்தியா தற்போதைய உலகளாவிய விவகாரங்களில் ஈடுபட்டு தனது சர்வதேச கொள்கைகள் முக்கிய இடத்தைப் பெற முனைவதோடு உலகளவில் தனது இருப்பை உணரச்செய்கிறது. இந்தியா G-20, IBSA, BRICS போன்ற புதிய உலகக் குழுக்களில் இணைந்துள்ளதானது உலகளாவிய விவகாரங்களில் பெரிய பங்கை வகிக்க இந்தியாவிற்கு அதிக வாய்ப்பை வழங்குகிறது.

உலகப் பாதுகாப்புக் குறித்த அக்கறை இந்தியாவின் ராணுவ நவீனமயமாக்கல், கடல்சார் பாதுகாப்பு மற்றும் அணுசக்திக் கொள்கைகளில் பிரதிபலிக்கின்றன.

இந்தியா உலகளவில் முடிவெடுக்கும் மற்றும் நிர்வாகத்தில் ஒரு முக்கியக் குரலாகவும் வளர்ந்து வரும் உலகளாவிய கட்டமைப்பில் ஒரு பாலமாகவும் சமநிலைப்படுத்தும் மிகப்பெரிய சக்தியாகவும் உருவெடுத்துள்ளது. இந்தியா மிகப்பெரிய பொருளாதார சவால்களை எதிர் கொண்டாலும்

பொருளாதார அரசியல் மற்றும் போர்த்திறன் சார்ந்த துறைகளில் கொள்கை வகுப்பாளர்களின் முடிவுகள் இந்தியாவை வலிமை வாய்ந்த சக்தியாக உருக்கொள்ளச் செய்துள்ளன. இத்தகைய சவால்கள் பொருளாதார வளர்ச்சியை நீட்டிக்கச் செய்தல், வளம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்றவைகளிலும் இராணுவத்தன்மை அல்லாத பிரச்சனைகளான காலநிலை மாற்றம், எரிசக்தி ஆற்றல் பாதுகாப்பு, அரிதான வளங்களுக்குப் போட்டி, உணவு மற்றும் நீர் பாதுகாப்பு, தொற்று நோய்கள் மற்றும் இடம் பெயர்தல் போன்ற விவகாரங்களிலும் மிகப்பெரிய வளர்ச்சி மாற்றங்களை அடைந்துள்ளது. இந்த சவால்கள் எண்ணற்றவையாகவும் கடினமானவையாகவும் இருந்த போதிலும் அவை இந்தியாவின் கொள்கை அமைப்புகளுக்கு எட்டாதவை அல்ல.

## இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கருத்துக்கள்

- தேசிய நலனைப் பேணுதல்
- உலக அமைதியை எய்துதல்
- ஆயுதக் குறைப்பு
- பிற நாடுகளுடன் நல்லுறவை வளர்த்தல்
- அமைதியான வழிகளில் பிரச்சனைகளைத் தீர்த்தல்
- அணி சேராக் கொள்கையின்படி சுதந்திரமான சிந்தனை மற்றும் செயல்பாடு
- சர்வதேச விவகாரங்களில் சமத்துவம்
- காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான நிலைப்பாடு

### படை வலிமை குறைப்புக் கொள்கை

நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் படைவலிமைக் குறைப்பை நடைமுறைப்படுத்துவது ஆகும். அமைதியை விரும்பும் நாடான இந்தியா, தொடக்கத்திலிருந்தே கருத்து மற்றும் எண்ணிக்கை அடிப்படையில் படைவலிமை குறைப்புக் காரணங்களுக்காகப் போராடி வருகிறது. சுதந்திரம் அடைந்ததிலிருந்து உலகளவில் ஆயுதப் பெருக்கத் தடை இந்தியாவின் அணு கொள்கையில் மேலோங்கிய ஒரு கருத்தாகவே இருந்து வருகிறது. இதனால் ஐ.நா.வின் படை வலிமைக் குறைப்புத் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளித்தது. 1974 மற்றும் 1998 அணு சோதனைகள் போர்த்திறமை சார்ந்த நடவடிக்கைகளுக்காகவே செய்யப்பட்டவையாகும்.

இந்தியாவின் அணுக் கொள்கையின் இரண்டு மையக் கருத்துக்கள்:

- முதலில் பயன்படுத்துவதில்லை
- குறைந்தபட்ச நம்பகமான தற்காப்புத் திறன்

அணு ஆயுதத்தைப் போர்த்தாக்குதலுக்குப் பயன்படுத்துவது இல்லை என்பதோடு அணு ஆயுதமற்ற எந்த ஒரு நாட்டிற்கு எதிராகவும் பயன்படுத்துவதுமில்லை என இந்தியா தீர்மானித்துள்ளது.

இந்திய–அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் இந்திய வெளியுறவுக் கொள்கையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

## புலம் பெயர்ந்த இந்தியர்கள்

“டயஸ்போரா” என்ற வார்த்தை குறிப்பிடுவது “ஒரு மக்கள் தொகையானது தனது சொந்த (தாய்) நாட்டில் (Homeland) இருந்து புலம் பெயர்ந்து பிற இடங்களுக்கோ அல்லது நாடுகளுக்கோ சென்று விடுவதை குறிக்கும். ஒரே கலாச்சாரத்தை அல்லது ஒரே நாட்டைச் சேர்ந்த மக்கள் கூட்டம் பல்வேறு காரணங்களால் குறிப்பாக பொருளாதார, வாழ்வாதார, அரசியல் மற்றும் இதர சமூக நிலைமைகளால் தங்களுடைய சொந்த நாட்டை காலி செய்து விட்டு பிற நாடுகளில் சென்று குடியேறுவதை குறிக்கும். சில நேரங்களில் தங்களுடைய நாட்டை விட்டு வெளியேறி வேறு எங்கேனும் தங்கிவிடுவது: இத்தகைய இடப்பெயர்வானது அல்லது மாறிச் செல்வதானது தன்னிச்சையாகவும் அல்லது கட்டாயத்தின் மீதும் இருக்க முடியும். மிகவும் துன்பகரமான நிகழ்வுகள், போர்கள், காலனி ஆதிக்கம், அடிமைத்தனம், இயற்கை பேரிடர்கள், தொடர் துன்புறுத்தல்கள், இழப்பு, சொந்த நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற ஏக்கம் போன்றவையெல்லாம் கட்டாயம் புலம் பெயர்ந்த மக்களின் காரணங்களாகும். தானாகவே முன் வந்து புலம் பெயர்ந்தோர் என்போர், இதைவிட சிறந்த பொருளாதார வாய்ப்பிற்காக தங்களது சொந்த நாட்டை விட்டு சென்றார்கள் ஆவர். உதாரணமாக பெருமளவிலான குடியேற்றமானது 1800ஆம் ஆண்டுகளில் ஐரோப்பாவின் பின்தங்கியப் பகுதிகளில் இருந்து அமெரிக்காவிற்கு சென்றதை குறிப்பிடலாம். கட்டாயத்தின் காரணமாக புலம் பெயர்ந்த மக்கள் கூட்டத்தினர் போலல்லாமல், தானாக முன் வந்து புலம் பெயரும் மக்கள் பிரிவினர் தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொள்வது மற்றும் சமூக மற்றும் அரசியல் ரீதியாகவும், எண்ணிக்கையிலும் ஏற்கும் படியாக ஆகிறார்கள்.

தற்போது, புலம் பெயர்ந்தோரின் தேவைக்கான கோரிக்கைகள், வெளிநாட்டு விவகாரங்களில், பொருளாதார வளர்ச்சி முதல் குடியேற்றம் வரையிலான அரசுக் கொள்கையை பாதிக்கின்றன. புலம் பெயர்ந்தோர் தங்கள் தாயத்தின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்கள் பணம் அனுப்பியவர்களாகவும் செயல்படுகிறார்கள், அவர்கள் வர்த்தகம் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிக்கிறார்கள், தொழில்முனைவோரை உருவாக்கி வளர்க்கிறார்கள் மற்றும் புதிய அறிவு மற்றும் திறன்களைப் பரிமாறிக் கொள்ள உதவுகிறார்கள்.

வெளிநாடு வாழ் இந்தியர் என்பதன் பொதுவான பதம், இந்தியக் குடியரசின் கீழ் வரும் ஒன்றியங்கள் மற்றும் மாநிலங்களிலுள்ள மக்கள் குடியேறுவதை குறிக்கும் இந்த வெளிநாடு வாழ்வோர் தற்சமயம் கிட்டத்தட்ட 30 மில்லியன் மேல் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இதில் (NRI எனப்படும்) இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் மற்றும் இந்தியாவை பூர்வீகமாக கொண்டு உலகெங்கும் பரவி இருப்போரையும் உள்ளடக்கியதாகும்.

**வெளிநாடு வாழ் இந்தியர் வகைப்படுத்தப்படுதல்**

- வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) இவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக இந்திய குடிமக்கள் காலவரையறையின்றி வெளிநாடுகளில் வசிக்கும் குடிமக்களை 'வெளிநாடு வாழ் இந்தியர்' என வகைப்படுத்தப்படுகின்றனர்.
- இந்திய வம்சாவழியினர் (PIO) இவர்கள் வெளிநாட்டு இந்தியர்கள் என்று வகைப்படுத்தப் படுகின்றனர். அங்கேயே குடியுரிமை பெற்று, அங்கேயே நிரந்தரமாக தங்கி விடும்வோரை குறிக்கும்.
- அரசற்ற இந்திய வம்சாவழியினர் - (SPIO) இவர்கள் அரசற்ற இந்திய வம்சாவழியினர், இவர்களிடம் தாங்கள் இந்தியர்கள் என்பதற்கு போதுமான ஆதாரங்களை கொண்ட ஆவணங்கள் வைத்து இருக்காதவர்கள் ஆவர்.

இந்திய அரசாங்கம் புலம் பெயர் இந்தியர் இன்றியமையாமையை அங்கீகரித்துள்ளது. ஏனெனில் அது பொருளாதார, நிதி மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த குடிமக்கள் இந்தியாவில் இருந்து வெகுதொலைவில் இருந்தாலும், உலக அரங்கில் இந்தியா பிரகாசிக்கச் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இந்தியா விடுதலை அடைந்த காலகட்டத்தில், பிரதமர் ஜவஹர்லால் நேரு புலம்பெயர் இந்தியர் இந்தியர்களிடம் இருந்து 'மிகவும் விலகியிருக்கும் கூடிய வகையில் தீவிரக் கொள்கையினை பின்பற்றினார்' சொந்த நாட்டின் இறையாண்மை பற்றிய விவகாரத்தில் அவர் தந்த முதன்மையினால் இந்த நிலையினை எடுத்தார். நேருவின் இந்தக் கொள்கை வெளிநாடு வாழ் இந்திய-பூர்வக்குடி மக்களுக்கு கசப்பானதாக இருந்தது. உலகெங்கும் உள்ள இந்திய சமூகத்தினர் அனைவரும் 'ஒருவரே' என்பது தேசிய தினத்தன்று அல்லது இதர முக்கிய நிகழ்வுகளில் மட்டுமே கருதப்படுகிறார்கள். பின்னர் ராஜீவ் காந்தியின் ஆட்சியின் போது தான் புலம்பெயர் இந்தியர் கொள்கையில் ஊக்கம் அளிக்கப்பட்டது. 1986ஆம் ஆண்டு பிஜி பிரச்சனையில் இந்தியர்களுக்கு ஆதரவு கொடுத்தார். இவற்றோடு புலம் பெயர் இந்தியர்கள் ஒரு "இந்தியாவின் திட்டங்களில் சொத்து" என உணர்ந்தார். மேலும் 1984ஆம் ஆண்டு வெளிநாடு வாழ்வோருக்கான துறையை நிறுவுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

புலம் பெயர்ந்த இந்தியர்களைப் பற்றிய கொள்கை, அவர்களை தேடிச் சென்றடைவதற்கு, அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையின் போது மீண்டும் தொடங்கியது. இவருடைய பதவிக்காலத்தின் பொழுது, முதன் முதலில் 2003ஆம் ஆண்டு புலம் பெயர்ந்த இந்தியர்களுக்கான "பிரவாசி பாரதிய திவாஸ்" என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இந்த "பிரவாசி பாரதிய திவாஸ்" தினக் கொண்டாட மானது ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி மாதம் 9 நாள், மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பிய நாளை குறிக்கும் விதமாக கொண்டாடப்படுகிறது. இந்திய அரசாங்கம் இதனை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடும் விதமாக நிகழ்ச்சிகளை நடத்தி குறிப்பாக புலம் பெயர்ந்த இந்தியர்களில் முக்கியமானவர்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்ச்சிகளும் உள்ளடக்கியதாகும்.

கடந்த 20 ஆண்டுகளாக, முன் எப்போதும் இல்லாத வகையில் இந்திய அரசாங்கம் எடுத்து வரும் முன் முயற்சிகள் யாவும் புலம் பெயர்ந்த இந்தியர்களின் நாட்டின் மேம்பாட்டிற்கு ஆற்றிவரும் பங்களிப்பானது மிகவும் வலுவானதும் மற்றும் இன்றியமையாகிறது. உலகளாவிய வெளிநாடுவாழ் இந்தியர்களின் முதலீடு உதவி, தொழில்நுட்பம் பேரின் நடந்ததை ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல், கூடுதலாக புலம் பெயர்ந்த இந்தியர்கள் 79 பில்லியன் டாலர்கள் தாய்நாட்டிற்கு அனுப்புவதன் மூலம் அந்நியப் பணத்தை பெரும் நாடுகளில், உலக அளவில் முதலிடத்தில் உள்ள நாடு என்ற இடத்தை இந்தியா தக்க வைத்துக் கொண்டது.

**புலம் பெயர்ந்த தமிழர்கள்**

புலம்பெயர்ந்த தமிழர்கள் என்போர் தங்களது மூதாதையர்களின் சொந்த நாடான தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் இலங்கையில் இருந்து குடியேற்றம் பெற்றவர்களை குறிக்கும் சொல்லாகும். அவர்கள் உலகம் முழுவதும் 50 நாடுகளில் பரவி இருக்கின்றனர். தென்கிழக்கு ஆசியா, ஒசியானா, அமெரிக்கா, கரீபியன், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா நாடுகள் ஆகியன இதில் அடங்கும்.

இவ்வாறு மிகவும் ஆரம்பகால குடியேற்ற வகையானது. மொரிஷியஸ், ஜமைக்கா, டிரினிடாட் மற்றும் டொபாகோ, சூரினாம், கயானா போன்ற நாடுகளுக்கு கரும்பு தோட்டத்திற்கு கூலித் தொழிலாளர்களாகச் சென்றது பற்றிய ஆதாரங்கள் மற்றும் மலேசியாவின் ரப்பர் தோட்டம் மற்றும் இருப்புப்பாதை பணி மற்றும் இலங்கையில் தேயிலை தோட்டம் ஆகியவற்றிலும் கூலித் தொழிலாளர்களாக கொண்டு செல்லப்பட்டனர். இது போக தாமாகவே சென்று எழுத்தர், நிர்வாகப் பணி மற்றும் ராணுவ பணிக்கு சென்றுள்ளனர். இந்த குடியேற்றம் பெற்றவர்கள் தான் படிப்படியாக வர்த்தகம் மற்றும் நிதி விவகாரங்களில் தென்கிழக்கு ஆசியாவில் செல்வாக்கு பெற்றவராக ஆயினர். குறிப்பாக இதில் மியான்மார், சிங்கப்பூர், மலேசியா மற்றும் தென்ஆப்பிரிக்கா வாழ் தமிழர்களும் இதில் அடங்குவர்.

நவீன புலம்பெயர்ந்த தமிழர்கள் திறன் பெற்ற தொழில் நிபுணர்களாக உலகம் முழுவதும் பல நாடுகளில் குடியேறியுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 3.5 மில்லியன் ஆகும். இதில் சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகள் அடங்கும். சிங்கப்பூர் தமிழ் தொலைக்காட்சி அலைவரிசை, வானொலி ஆகியவற்றின் மூலம் தமிழ் மொழியை வளர்த்தெடுக்கிறது. உலகம் முழுவதும் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆண்டுதோறும் நடத்தப்படும் புலம் பெயர்ந்தோரின் விழாக்களில் கலந்து கொள்கின்றனர். தங்கள் சொந்த தாய் மண்ணை விட்டு விலகி சென்றாலும் அவர்கள் பண்பாட்டு வழியில் தங்களது தாய் மண்ணான இந்தியா அல்லது தமிழகத்து பண்பாடுகளை உலகெங்கும் கொண்டு செல்பவராகவே உள்ளனர்.

## வினாக்கள்

1. வெளிநாடு வாழ் இந்தியர்களை வகைப்படுத்தி அவர்களின் பங்களிப்பினை விவரி
2. அணிசேரா இயக்கம் பற்றி தொகுப்பு தருக.
3. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் காரணிகளை எழுதுக.